**cross**

**O.S.No. 139/2016**

**Date: 15.09.2025**

**பி.வா.சா 2 ஜெயராஜ்**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் நாலுவாசன் கோட்டையில் குடியிருந்து வருகிறேன். அதற்கு முன்பு சென்னையில் திரிசூலத்தில் குடியிருந்து வந்தேன். அங்கு கல்குவாரியில் வேலைசெய்து வந்தேன். என்னை சாட்சி சொல்ல 2ம் பிரதிவாதி ஆசிர்வாதம் கூட்டிட்டு வந்தார். தாவா சொத்து 1 ½ ஏக்கருக்கு வழக்கு நடக்கிறது என்று 2ம் பிரதிவாதி ஆசிர்வாதம் கூறினார். தாவா சொத்து ஆதியில் 2ம் பிரதிவாதி அம்மாவுக்கு பாதி அப்பாவுக்கு பாதி பாத்தியம். நான் வாதியுடன் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வாதி, 2ம் பிரதிவாதி ஆகீயோர்களுடன் சேர்ந்து உடன் பிறந்தோர்கள் 5 பேர்கள். வாதி மற்றும் 2ம் பிரதிவாதியின் தாயார் தகப்பனாரும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை மக்கள் அனைவருக்கும் தனித்தனியாக எழுதி வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படியார்கள் சொத்துக்களை பாகம் பிரித்து கொள்ளவில்லை என்றால் பெற்றோர்கள் இருக்கும்போதே பிரித்துக்கொண்டார்கள். 30 வருடங்களுக்கு முன்பு பிரித்துக்கொண்டதாக 2ம் பிரதிவாதி கூறினார். எனக்கு நேரடியாக தெரியாது. யார் யார்க்கு எந்த எந்த சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் 2ம் பிரதிவாதி சொன்னதின் அடிப்படையில் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் சரிதான். வாதி, பிரதிவாதிகள் பெற்றோர்கள் உயிருடன் இருக்கும்போதே சொத்துக்கள் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியும் பிரதிவாதியும் அவர்களுக்கு உரிய பாகச் சொத்தினை தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்று உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வாதி மீது விரோதம் காரணமாக வாதிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வெளியூரில் குடியிருந்து வருகிறேன் என்றாலும் நான் சொல்வது போல் தாவா கிராமத்தில் குடியிருக்கவில்லை என்றாலும் மேற்படி சொத்துக்களின் அனுபவம் பற்றி எனக்கு தெரியாது என்றாலும் எனது சாட்சியம் ஏற்க்கத்தக்கது என்றாலும் சரியல்ல.